வெள்ளவாய பிரதேச சபை - 2023

--------------------------------------------------------------

## 1. <u>நிதிக்கூற்றுக்கள்</u>

### 1.1 <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயம்</u>

வெள்ளவாய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெள்ளவாய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை</u>

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 <u>நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்</u>

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 <u>கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)</u>

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்களை சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | பொது வைப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபாய் 153,730 ஆன வைப்பு மீதிகள் 03 நிதிநிலை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொண்டு மீதிகளை சீராக்குவதாக | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ல் உள்ளவாறு பெறுமதி திட்டவட்டமாக இனங்கான முடியாத இருப்பு பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்ட 06 வகைக்குறிய 110 ஆவணங்களின் இருப்புப் பெறுமதி இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | அச்சீட்டு இருப்பு பதிவேடு பரீட்சிக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களுக்குரிய சீராக்கங்கள் செய்து மீதிகள் சரி செய்யப்படும். | அனைத்து சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு வேலை பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 12,095,414 ஆன 05 நிர்மாணங்கள் முடிவடைந்த வேலை பெறுமதி காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொண்டு மீதிகளை சீராக்குவதாக | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் 03 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 178,900 ஆன சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொண்டு மீதிகளை சீராக்குவதாக | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட வெள்ளவாய சபை கட்டிடத்தின் ஆவண காப்பகம் | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொண்டு மீதிகளை | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் சிற்றுண்டிச்சாலையின் மேம்படுத்தப்பட்டமைக்காக செலவிடப்பட்ட கிரயம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | சீராக்குவதாக | |
| (ஊ) | மீளாய்வாண்டில் உள்ளூராட்சிமன்ற திணைக்களத்திடமிருந்து கிடைத்தTABLET கனணி இயந்திரத்தின் பெறுமதி இனம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொண்டு மீதிகளை சீராக்குவதாக | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (எ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 63,500 ஆன காணி மற்றும் 02 கட்டிடங்கள் மற்றும் ரூபா 92,000 ஆன கணனி அச்சீட்டு இயந்திரத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது உரிய சீராக்கங்களை மேற்கொள்வதாக | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஏ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த டபள் கெப் வண்டியின் பெறுமதி நிதிநிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படாத இருந்ததுடன் பௌதீக ரீதியாகவும் காணப்படவில்லை. | இது பௌதீக ரீதியான அலுவலகத்தில் இல்லாத சொத்து என்பதால் பெறுமதி கணக்கீடு செய்ய முடியாது என்று உடன் இருப்பு பதிவேட்டில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அரசின் உரித்து மற்றும் நிலைத்திரு தன்மை சரி செய்யப்பட வேண்டும் |
| (ஐ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ல் உள்ளவாறு நிலுவை முத்திரை கட்டண வருமானம் ரூபா 22,973,156 ஆக இருந்த போதும் அது ரூபா 22,665,398 என ரூபா 307,758 குறைத்து பதிவு செய்யப்பட்டுள்ளது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது உரிய சீராக்கங்களை மேற்கொள்வதாக | சபைக்கு சொந்தமான வருமானங்கள் சரியாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 16,035,480 ஆக இருந்தபோதும் அது ரூபா 15,865,930 என ரூபா 169,500 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொண்டு மீதிகளை சீராக்குவதாக | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஓ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொண்டு மீதிகளை சீராக்குவதாக | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஔ) | 2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட வாசிகசாலைப் புத்தகங்களின் பெறுமதி ரூபா. 127,871 ஆன தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் உரிய சீராக்கங்களை நிதிக் கூற்றுகளில் மேற்கொண்டு மீதிகளை சரி செய்வதாக. | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்படும் மீதிகள் மற்றும் அதற்காக வழங்கப்பட்டிருந்த பட்டோலைகள் ˙ ஆவணங்களின் பிரகாரம் மீதிகளுக்கு ரூபா 3,224,267 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | குறித்த தகவல்களை தேடி பதிவேடுகளை சீராக்குவதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக | நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது அட்டவணைகளில் காண்பித்த மீதிகள் அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 111,822,746 கூட்டுப்பெறுமதியான 10 சொத்து விடயங்கள் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கை, நிலையான சொத்துக்கள் பதிவேடு, நாளதுவரையாக்கப்பட்ட வருமான பதிவேடுகள் சமர்ப்பிக்கப் படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | உரிய பதிவேடுகளை நாளதுவரையாக்கி செல்லுமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக | நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சொத்து மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு பதிவேடுக்ள மற்றும் அட்டவணை அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) 19(xii) ஆம் பிரிவு | சபைக்கு உரிய 60 கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக | நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கு விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 24(1) ஆம் பிரிவு | சபையினால் பராமரிக்கப்படும் வீதிகள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 191 வீதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | வீதிகள் பதிவேட்டினை நாளதுவரையாக்கு மாறு ் விடயப் பொறுப்பு உத்தியோகத்திற்கு ஆலோசனை வழங் கப்பட்டுள்ளதாக | சபையின் வீதிகள் பதிவேடுகளில உள்ள வீதிகளை வர்த்தமானியில் வெளியிட வேண்டும் |
| (ஆ) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | 2016 – 2020 ஆம் ஆண்டு வரை அங்கீகரிக்கப்பட்டிருந்த 275 கட்டிட விண்ணப்பங்களில் 214 பரீட்சித்து இணக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த கட்டிடங்களைப் பரீட்சித்து இணக்கச் சானிதழ்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாக | சபைஅதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படு கின்ற நிர்மாணங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2002 பெப்ரவரி 25 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபையிடமுள்ள வாகனங்கள் மற்றும் 09 இயந்திரங்களில் அரசின் இலட்சிணை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையிடமுள்ள சகல வாகனங்களிலும் இயந்திரங்களிலும் அரசின் இலட்சிணை பொறிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுப்பதாக | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | விதி விளக்குகள் பதிவேட்டின் பிரகாரம் பிரதேசத்தில் 2000 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்த போதும் வீதிகளுக்கு வெளிச்சமுட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்க வில்லை | எதிர்காலத்தில் உடன்படிக்கை செய்வதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 111,463,209 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,240,661 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 6,265,905 | 6,194,521 | 1,709,005 | 4,485,516 | 6,246,032 | 6,092,873 | 2,037,152 | 3,862,439 |
| (ii) | வாடகை | 17,812,000 | 12,707,108 | 10,121,259 | 2,585,849 | 15,116,000 | 10,264,672 | 5,445,948 | 4,832,094 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 19,701,025 | 2,116,978 | 2,107,978 | 9,000 | 6,361,025 | 2,201,106 | 2,156,106 | 45,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 51,323,500 | 34,227,057 | 17,889,065 | 16,337,992 | 2,987,000 | 1,755,755 | 483,272 | 1,272,483 |
| | | 95,102,430 | 55,245,664 | 31,827,307 | 23,418,357 | 30,710,057 | 20,314,406 | 10,122,478 | 10,012,016 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------ | ------------------------------------ | ------------------- |
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 5,860,614 ஆன வீதவரி வருமானத்தில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,026,022 தொகை அதாவது 69 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்த பணம் நிலுவையுடன் ஈடு செய்யப்பட்டதால் நடப்பாண்டு அறவீடு குறைவாக இருந்ததாக | பட்டியலிடப்பட்ட வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 18,319,443 ஆன நிலுவை வீதவரியில் ரூபா 16,573,262 அதாவது 90 சதவீதத்தை டிஅறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமான பரிசோதகர் பதவி வெற்றிடமாக காணப்படுவதால் வருமான அறவீடு குறைந்த மட்டத்தில் காணப்படுவதாக | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | 8 கேள்வி ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்குரிய மீளாய்வாண்டின் போது பட்டியலிடப்பட்ட ரூபா 5,057,329 ஆன ஆதன வருமானத்தில் ரூபா 502,916 தொகை மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பட்டியலிடப்பட்ட வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் மற்றும் 2019 முதல் 2023 ஆம் ஆண்டு வரை சபைக்கு சொந்தமான 13 ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 6,933,148 ஆன வாடகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| | **<u>வாடகை</u>** | | |
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 4,916,548 ஆன கடை வாடகை வருமானத்தில் ரூபா 1,934,709 தொகை அதாவது 40 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நடப்பு அறவீடு நிலுவை வாடகைக்கு ஈடு செய்யப்பட்டதால் நடப்பு அறவீடு குறைந்த மட்டத்தில் உள்ளதாக | பட்டியலிடப்பட்ட வருமானம் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 8,342,408 ஆன நிலுவை கடை வாடகையில் ஆண்டில் ரூபா 6,223,070 அதாவது 74 சதவீதத்தை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பட்டியலிடப்பட்ட வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| | **<u>ஏனைய வருமானம்</u>** | | |
| (அ) | சபை அதிகார பிரதேசத்தில் தாபிக்கப்பட்டிருந்த 04 நிறவனங்களுக்குரிய 08 தொலைத்தொடர்பு கோபுரங் களிலிருந்து 2019-2023 காலப்பகுதிக்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 54,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2013-2021 காலப்பகுதிக்குரிய சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றம் இயந்திரங்கள் என்பவற்றை வாடகைக்கு வழங்கியதால் 22 தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,674,870 ஆன நிலுவை இயந்திர வாடகை வருமானம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு இருக்கவில்லை | நிலுவை வாடகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 14 விளம்பர பதாதைகளிலிருந்து 2017 – 2022 வரையான காலப்பகுதிக்காக அறவிட வேண்டிய ரூபா 326,550 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 10,232 தொகையும், முத்திரைக் கட்டணங்கள் ரூபா 14,468,254 தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேறறுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய கைத்தொழில்களை இனங் காண்பதற்காக 2023 ஆம் ஆண்டில் கணிப்பீடு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>அத்துடன் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு அனுமதி பத்திரங்களின் செல்லுபடிக் காலம் கடந்திருந்த 50 கைத்தொழில்களுக்காக மீண்டும் சுற்றாடல் அனுமதி பத்திரங்கள் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் நடவடிக்கை களை மேற்கொள்ள விடய உத்தியோகத்தருக்கு ஆலோசணை வழங்கியுள்ளதாக | சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில்களை ஒழுங்குபடுத்துதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பான உள்ளுராட்சி மன்ற நிறுவனங்களுக்கான வழிகாட்டல் கோவையின் 2.5.2 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திர கட்டணங்கள் மற்றும் வெளிக்கள பரிசோதனை கட்டணங்களாக | வேறாக கணக்கொன்று பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்படுகின்ற தொகையை செலவு வைப்பதற்காக வேறாக கணக்கொன்று பேணப்பட்டு இருக்கவில்லை. | | |
| (ஆ) | சபைக்குரிய 03 முன்னைய ஆண்டுகளின் போது வாசிப்போருக்கு வழங்கப் பட்டிருந்த ரூபா 31,349 பெறுமதியான 137 நூலக புத்தகங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த புத்தகங்களை பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஆலோசணைகள் வழங்கியுள்ளதாக | வாசிப்போருக்கு வழங்கப்பட்டிருந்த புத்தகங்களை மீளப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------ | -------------------------------------- | -------------------- |
| (அ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் II ஆம் பகுதியின் 23(1) ஆம் பிரிவின் பிரகாரம் தெஎல்ல பிதேசத்தில் பிரிக்கப்பட்ட 45 ஏக்கர் காணியில் சபைக்கு கிடைக்க வேண்டிய கரியை வேறாக்கி சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள விடய உத்தியோகத்தருக்கு ஆலோசணை வழங்கியுள்ளதாக | சபைக்கு கிடைக்க வேண்டிய காணிப் பகுதியை முறையாக வேறாக்கி சபைக்கு கையேற்க வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் பிரதேச சபை எல்லைக்குள் ஏல விற்பனை செய்யப்படுகின்ற காணி ஒன்றில் அந்த காணி விற்பனையால் கிடைத்த தொகையில் 1 சதவீத தொகையினை பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய போதிலும் வெள்ளவாய பிரதேச சபை | இது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள விடய உத்தியோகத்தருக்கு ஆலோசணை வழங்கியுள்ளதாக | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் உரிய வரித் தொகை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எல்லையில் ஏல விற்பனை செய்யப்பட்ட 694 காணிகளில் இருந்து குறித்த வரித் தொகையை அறவிடுவதற்கோ அல்லது அது தொடர்பான தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | கடை வாடகை மதிப்பீடு செய்யாமல் சபைக்கு சொந்தமான 37 கடைகளில் மாதம் ஒன்றுக்கு ரூபா 200 முதல் ரூபா 1,000 வரையான கடை வாடகை அறவிடப்பட்டு காணப்பட்டது. | கடை அறை வாடகை தொடர்பாக மதிப்பீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | கடை வாடகை உரிய காலத்தில் மதிப்பேடு செய்யப்பட்டு அறவிடப்பட வேண்டும் |
| (ஈ) | பிரதேச சபைக்குிய பஸ் நிறுத்துமிடத்தின் 32 கடைகள் மற்றும் ஒரு மீச்சந்தை தொகுதியின் 42 கடைகளில் வாடகை 2011 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் விலை மதிப்பீட்டு திணைகளத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் காலரீதியாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கடை அறை வாடகை தொடர்பாக மதிப்பீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | கடை வாடகை உரிய காலத்தில் மதிப்பேடு செய்யப்பட்டு அறவிடப்பட வேண்டும் |
| (உ) | பிரதேச சபைக்குரிய 15 கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது குத்தகையாளருடன் உடன்படிக்கை செய்யாப்பாடதிருந்ததுடன் அதில் 11 கடைகளுக்குரிய ஆண்டில் பட்டியலிடல் இடம் பெற்ற போதும் எவ்வித வருமானமும் சேகரிக்கப்பட்டு இருக்கவில்லை. | கடை குத்தகைக்கு வழங்குவதற்கான உடன்படிக்கை செய்வதற்கு குத்தகையாளருடன் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | சபைக்குரிய ஆதனங்களை குத்தகைக்கு வழங்கும் போது குத்தகையாளருடன் உடன்படிக்கை மேறகொள்ள வேண்டியதுடன் பட்டியலிடப்பட்ட வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையால் நிர்வகிக்கப்படுகின்ற யாழப்போக பசுமை பூங்கா அமைந்துள்ள காணியின் உரித்து சட்டரீதியாக பிரதேச சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் சட்டபூர்வமான உரித்தை கையேற்பதற்கு தேவையான வேண்டுகோள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள தாக | சபை பயன்படுத்தப்படுகின்ற காணிகளின் சட்டபூர்வமான தன்மையை உறுதி உரித்தை கையேயற்க வேண்டும். |
| (ஆ) | பெக்கோ லோடர் 2021 ஆகஸ்ட் 17 ஆம் திகதி விபத்துக்குட்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவில் திருத்தம் செய்வதற்கு நடவவடிக்கை எடுப்பதாக | வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் திருத்தங்களை உரிய கால எல்லைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | பிரதேச சபைக்குரிய 02 வாகனங்கள் 12 ஆண்டு காலமாக செயலற்று காணப்படுவதுடன் வாகனங்களை திருத்துவதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | உரிய காலத்தில் வாகனங்களை திருத்துவதற்கு அல்லது கை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பிரதேச சபையால் பயன்படுத்தப்படுகின்ற 02 வாகனங்களின் சட்ட ரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | சபைக்கு சொந்தமான வாகனங்களில் சட்ட ரீதியான உரித்தை சபைக்கு கையேற்க வேண்டும் |
| (உ) | பிரதேச சபைகுரிய 04 காணிகள் 77 மயானங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிலையான சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் மயானங்களை அளவிடுவதற்காக பிரதேச செயலாத்தினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால் | சபைக்கு சொந்தமான காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| | அளவீட்டு பத்திரங்கள் கிடைத்தவுடன் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 06 பதவிகளுக்குரிய அங்கீகரிக் கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 07 ஊழியர்கள் பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து தருமாறு உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) சபையில் சேவை புரிந்த 53 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய் ரூபா 135,597 ஆன கடன் மீதிகள் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | விரைவில் ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விரைவில் ஊழியர் கடன் மீதிகளை உரிய காலத்தில் அறவிடுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வான்டிற்காக பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், ஆண்டின் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு ஒப்பிடும் போது 08 வருமான விடயங்களில் 0.8 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையிலும் 07 செலவன வியங்களில் 29 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான கருத்திற் கொள்ளக்கூடிய விலகல் அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் முறையாக பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருடாந்த பாதீடு மிகவும் நடைமுறை ரீதியில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 4.2 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் கலி சேவை மூலம் அகற்றப்படுகின்ற மலக்கழிவுகள் ஆனபள்ளம கொம்போஸ்ட் பிரிவின் திறந்த குழிக்குள் வெளியேற்றப்படுவதால் மழையுடன் அக்குழிகள் நிறைந்து செல்வது அவதானிக்கப்பட்டது. மலக்கழிவுகள் வெளியேற்றுவதற்குரிய சபையினால் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முறையான மலக்கழிவு வெளியேற்றும் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு போதியளவு நிதிஏற்பாடுமு இல்லாமையால் இச்சிக்கலைத் தீர்வு செய்வதற்கு தற்போது உள்ளூராட்சி மன்ற அமைச்சிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக | முறையான மலக்கழிவு வெளியேற்றல் முறைப்படுத்தப்பட வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030’’ தொடர்பாக சபையால் அறிந்திருந்த போதும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காண்பதற்காக தேவையான நடவடிக்கை எடுப்பதாக | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட வேண்டும். |